**செய்தி வெளியீடு எண்: 099** **நாள்: 05.02.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், விவசாயிகளின் நலனிற்காக வேளாண் தகவல்கள் அனைத்தும் உள்ளடக்கி தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட ‘‘உழவன்’’ கைபேசி செயலியுடன், டிராக்டர் அன்டு ஃபார்ம் எக்யூப்மெண்ட்ஸ் லிமிடெட் (TAFE) ஜெஃபார்ம் (JFarm) நிறுவனம் இணைந்து, வேளாண் பணிகளுக்கான இயந்திரங்களை விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் பயன்படுத்தும் நோக்கத்துடன் தயாரித்துள்ள கைபேசி செயலி சேவையினை துவக்கி வைத்தார்கள்.

தகவல் தொழில்நுட்பம் மூலம் விவசாய பெருமக்களுக்கு வேளாண் தகவல்களை கொண்டு சேர்ப்பதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வரும் தமிழ்நாடு, விவசாயிகளின் நலனிற்காக வேளாண்மை தொடர்பான அனைத்து திட்டங்களின் மானிய விவரங்கள், பயிர் காப்பீடு செய்த விவரங்கள் உள்ளிட்ட 12 முக்கிய சேவைகளை உள்ளடக்கிய ‘‘உழவன்’’ என்ற கைபேசி செயலியினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5.4.2018 அன்று அறிமுகப்படுத்தினார்கள். இதுவரை 3.8 லட்சம் பயனாளிகள் இந்த கைபேசி செயலியினை முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், 72,548 விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உயர் மதிப்புள்ள இடுபொருட்களை மானியத்தில் முன்னுரிமை அடிப்படையில் பெறும் பொருட்டு இந்த செயலியின் மூலம் முன்பதிவு செய்துள்ளனர்.

வேளாண் இயந்திரமாக்கல் துரிதமாக விவசாயிகளிடையே நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இக்காலகட்டத்தில், விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு பயன்படுத்திக் கொள்ள 76 அரசு மற்றும் 625 தனியார் மையங்களை இக்கைபேசி செயலியில் உள்ள வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் சேவை மூலம் தொடர்பு கொண்டு பயனடைந்து வருகின்றனர்.

இம்முயற்சியின் அடுத்த கட்டமாக, டிராக்டர் அன்டு ஃபார்ம் எக்யூப்மெண்ட்ஸ் லிமிடெட் (TAFE)-ன் ஜெஃபார்ம் (JFarm) நிறுவனம் தாங்கள் தயாரித்து அளித்து வரும் பண்ணை சார்ந்த வாடகை இயந்திரம் மையத்தின் சேவைகளை, தமிழ்நாடு அரசின் ‘‘உழவன் கைபேசி’’ செயலியுடன் கூட்டாண்மை சமூக பொறுப்பின் அடிப்படையில் (Corporate Social Responsibility) இணைத்து, டிராக்டர் மற்றும் பண்ணை இயந்திரங்களை வைத்திருக்கும் விவசாயிகள் வாடகைக்கு அளிக்க செயலியில் பதிவு செய்தல், டிராக்டர் மற்றும் பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்கு எடுக்க பதிவு செய்தல் போன்ற சேவைகளை அளித்திடும் வகையில், தயாரிக்கப்பட்டுள்ள

கைபேசி செயலி சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த சேவையின் மூலம், விவசாய இயந்திரங்களை வாடகைக்கு எடுக்க விரும்புவோர் தங்களுக்கு தேவையான பண்ணை இயந்திரம் எவரிடம் உள்ளது, எந்தத் தேதியில் கிடைக்கும், அதற்கான வாடகை என்ன போன்ற விவரங்களை அறிய இயலும். அதேபோன்று, விவசாய இயந்திரங்களை வாடகைக்கு அளிக்க விரும்புவோர் இயந்திரங்கள் யாருக்கு தேவை, எந்த தேதியில் தேவை போன்ற விவரங்களையும் அறிய இயலும். மேலும், கைபேசி செயலியினை பயன்படுத்த முடியாதவர்கள், சேவை மையத்தின் மூலமாக கட்டணமில்லாத தொலைபேசி எண் 1800 420 0100–ஐ தொடர்பு இச்சேவைகளை பெற்று பயன்பெறலாம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு.எஸ்.ஜே சிரு, இ.ஆ.ப., வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் திரு.எம். முருகேசன், TAFE நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு.கேசவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**